**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure )**
**--**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.198/2024 | அரசுதரப்பு சாட்சி | P.W.6 |
| பெயர் | சுகுமார் | கிராமம் | |
| தந்தை பெயர் | துளசிமுத்துராமன் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thirumathi.kanimozhi, Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 14.07.2026
As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.
எதிரி ஆஜர் . எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.
**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது புதுக்கோட்டை காமராஜர்புரம் 25ம் வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் சிவில் இன்ஞினியராக பணி செய்து வருகிறேன். 12.07.2023ம் தேதி காலை 09.30 மணியளவில் நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் புதுக்கோட்டை பஸ் ஸ்டாண்ட் சென்று விட்டு சத்தியமூர்த்தி சாலையில் பழைய கிங்ஸ் பேக்கரி அருகே நான் சென்று கொண்டிருந்த போது சவுந்திரராஜன் என்பவர் பல்சர் வாகனத்தில் அடிபட்டு கீழே கிடந்தார். அவருக்கு வலதுகால் முட்டியில் காயம் ஏற்பட்டிருந்தது. கண்ணில் வீக்கம் இருந்தது. அவருக்கு தலையில் அடிபட்டு இருந்தது. அக்கம்பக்கத்தில் இருந்தவர்களும் அவனும் மகனும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக புதுக்கோட்டை அரசு

மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சவுந்திரராஜன் மீது மோதிய பல்சர் பைக்கின் பதிவு எண் சம்பவ சமயத்தில் பார்த்தேன். தற்போது ஞாபகம் இல்லை. சம்பவ சமயத்தில் நான் பல்சரை ஒட்டிவந்த நபரை பார்க்கவில்லை. அதன்பிறகு ஆஜர் எதிரி தான் பல்சர் பைக்கை ஓட்டி வந்த நபர் என்று சொன்னார்கள். இந்த விபத்துக்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. மருத்துவமனையில் சேர்க்கப்ட்ட சவுந்திரராஜன் இறந்துவிட்டடாதாக பின்னர் கேள்விபட்டேன்.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது சம்பவ தேதி சம்பவ நேரத்தில் கிங்ஸ் பேக்கரி அருகே நான் இருசக்கர வாகனத்தில் வந்தபோது எனக்கு முன்பாக அதே திசையில் ரோட்டின் இடது ஓரமாக சவுந்திரராஜன் நடந்து சென்று கொண்டிருந்தார் என்றும் அதே திசையில் சவுந்திரராஜனுக்கு பின்னால் வந்த Bajaj Pulzar இருசக்கர வாகன பதிவு எண் TN 55 BU 5801 என்ற வாகனத்தை சம்பவ சமயத்தில் இந்த வழக்கின் எதிரி அதிவேகமாக ஓட்டிவந்து நடந்து சென்ற சவுந்திரராஜன் மீது வேகமாக மோதி அவர் தூக்கி எறியப்பட்டு

ரோட்டில் விழுந்தார் என்றும் அவருக்கு காயம் ஏற்பட்டது. இந்த விபத்திற்கு பல்சர் வாகனம் ஓட்டிவந்த ஆஜர் எதிரிதான் காரணம் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக நேரில் பார்த்த உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை

Sd/–சுகுமார்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**